VISIT…

தமிழில் கவிதைகள்

படைப்பாளி Unknown

(அ)நியாயம்

என்னடி இது நியாயம்???
என் இதயத்தை திருடியவள் நீ
தனிமை சிறையில்
தண்டனை பெறுவது நானா???

ஏன் உனக்கு புரியவில்லை?

என் மனம்
உன்னிடம் உள்ள போதும்
ஏன்
என் மனம்
உனக்கு புரியவில்லை?

நாளும்
யானிதியின்
நட்சத்திரங்களுக்கு கூட
நானம் யருகின்றதாம்!
அதனால் தான்
உன் யிழிகளின்
ஒளிச் சிதறலைப் பார்த்து
ஓடி ஒளிகின்றனரோ?

உனது பெயர்
அன்பே
உனது பெயரைக் கூட உச்சரிக்காமல்
பூட்டி வைத்திருக்கிறாள்
என் இதயத்துக்குள்ளே...
ஏன் தெரியுமா?
உதடுகள் உச்சரிக்கும்
உரசலில் கூட
உனது பெயரில்
விரிசல் வரக் கூடாது
அல்லவா?

நினைக்கவில்லை உன்னை

நினைக்கவில்லை...
உன்னை
நினைக்கவில்லை...
மறந்தால் தானே
உன்னை
நினைப்பதற்கு!

உன் முகம்

ஆயிரம் ஆயிரம் முகங்களிலும்
தேடிக் கொண்டிருக்கிறேன்...
அறிமுகமாகாத
உன் முகத்தை!

நிலவு

பௌர்ணமியின் நிலவு
உலகுக்கு
பரவுவது போல...
என்
இதயம் பூராவும்
நீ நிரம்பி
இருக்கின்றாய்.

மேகம்

ஏன் அழுகிறாய்?
நீ தூது விட்ட
மேகங்கள்
பாதி வழியிலே
மழையாய்
கரைந்ததற்கா???

பூவுக்கெவ்வாம் சிறகு முளைத்தது. எந்தன் தோட்டத்தில்
வின்மீன்களெவ்வாம் நிலவாய் போனது எந்தன் வானத்தில்
முப்பது நாளும் முகூர்த்தமானது எந்தன் மாதத்தில்
முள்ளில்லாத தேன்துளி கசிந்தது எந்தன் ராகத்தில்
இது எப்படி எப்படி நியாயம்? எவ்வாம் காதல்
செய்த மாயம்.

ஒட்டாதே

காதலியே
இனி அனுப்பும் கடிதங்களுக்கு
தபால் தலை
ஒட்டாதே
உன் இதயம் சுமந்து வரும்
கடிதங்களுக்கு
அவர்கள் ஓங்கிக் குத்துவதைத்
தாங்கமுடியவில்லை

இரக்கம்

தபால்காரனுக்கு கூட என் மீது
இரக்கம் இருக்கிறது
எவர் வீட்டு கடிதத்தையாவது
என் வீட்டில் போட்டு
தற்காலிக மகிழ்ச்சியாவது தருகிறான்
நீ தான் இரக்கமில்லாமலே இருக்கிறாய்
எனக்கு வரவேண்டிய கடிதத்தை
இன்னும் எழுத தொடங்காமல்!!

சொர்க்கம்

சொர்க்கத்தின்
விலாசத்தை போய்
விசாரித்தேன்
அவள் தான்
சொர்க்கம்
என்பதை
அறிந்து
கொள்ளாமல்!!!

எனது பெயர்

உன்னுடைய உதடுகள்
உச்சரிக்கும் வரை
நான் உணர்ந்ததில்லை
என்னுடைய பெயர்
இத்தனை அழகாய்
இருக்கிறது என்று!!

விடியல்

காத்திருக்கிறேன்
விடியலுக்காக
ஏட்டில்
மட்டுமல்ல
வாழ்விலும்
வசந்தம்
வரட்டும்
என்பதற்காக!!!

கவிதை

எனக்கு தெரியும்
நீ விரும்புவது என்னையல்ல....
என் கவிதைகளைத் தான் என்று.....
ஆனால் உனக்கு தெரியுமா
உன்னை விரும்புவது
என் கவிதைகளல்ல
நான் தான் என்று!!!

கடிதம்

எழுது எழுது....
எனக்கு ஒரு கடிதம் எழுது...
என்னை நேசிக்கிறாய் என்றல்ல..
நீ வேறு எவரையும்
நேசிக்கவில்லை என்றாவது
எழுது!!!

(அ)நியாயம்

என்னடி இது நியாயம்?
என் இதயத்தை திருடியவள் நீ
தனிமை சிறையில்
தண்டனை பெறுவது நானா?

உன்னைப் போல் பூம் பாவை
மண்ணில் தூறு பார்த்தேன்

உள்ளம் வரை உன்னைத் தான்
உயிரினில் சேர்த்தேன்

முயற்சிகள்லாம் சிறகு முளைத்தது. எந்தன் தோட்டத்தில்
வண்ணமீன்களெல்லாம் நிலவாய் போனது எந்தன் வானத்தில்
முப்பது நாளும் முகூர்த்தமானது எந்தன் மாதத்தில்
முள்ளில்லாத தேன்துளி கசிந்தது எந்தன் ராகத்தில்
இது எப்படி எப்படி நியாயம்? எல்லாம் காதல்
செய்த மாயம்.

நீ காற்று, நான் மரம்
என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்
நீ மழை, நான் பூமி
எங்கு விழுந்தாலும் ஏந்திக்கொள்வேன்
நீ இரவு, நான் விண் மீன்
நீ இருக்கும்வரை தான் நான் இருப்பேன்

இனியவளே இனி யாரையும்
நிமிர்ந்து பார்காதே!
உன் கண்களை பார்த்தே
என்னைக்கண்டு பிடித்து விடுவார்கள்

உறவு

சுற்றமும் சூழலும்
படைத்து விட்ட உறவுகளை
காட்டிலும் உள்ளமும்
உணர்வுகளும் புரிந்து கொண்ட
உறவே மேலானது!!!

நினைவு

எனது இதய நதியின்
ஓடமாய்
உன் நினைவுகள்
என்றும்
ஒடிக்கொண்டே இருக்கும்!!!

அது ஒரு தனி உலகம்

இணைய வலங்கள்
இன்றைய உலகம்
அடுக்கடுக்காய் தகவல்கள்
அதிசயிக்க வைக்கும் அற்புதங்கள்
விரல்நுனியில் பல்வேறு விபரங்கள்

இரண்டு பக்கம் எதற்குமே
இருப்பது அறிவீரன்றோ
இணையம் ஒன்று இருப்பதனால் இளசுகள் கெடுகின்றார்
இவர்களுக்கு இது எதற்கு
இல்லாமை நன்றென்பார் ஒரு சாரார்.

பிழையான விவாதம் இது
பிள்ளைகளைக் கெடுக்கவில்லை
பிரித்தறியப் பழகிவிட்டால்
பிரச்சினைகள் ஏதுமில்லை என்பார் மறுசாரார்

இன்னொரு உலகம் இது
இங்கு இலலாத விடயம் ஏது
இருப்பதைக் கற்காத போது
இவர்கள் உயர்வது எப்போது?

மொழிகளின் ஜாலங்கள்

கருத்துப் பரிமாற்றங்கள்
கவினுறு காட்சிகளின் வர்ணனைகள்
கல்வியின்பால் பெருமோகம்
கற்பனைக் கடலில் சுழியோட்டம்
களிப்போ கவலையோ பகிருகின்ற கோலம்
கதைகதையாய்ச் சொல்லுகின்ற கலைத்தாகமெல்லாம்
கண்டிடுவீர் நம் பேசும் மொழிகளிலே

மொழிகளென்ற பாலத்தின் இணைப்பினாலே
வழிகளெல்லாம் நட்பெனும் நறுமணப் பூங்காக்கள்
தொழில்வாய்ப்பில் தோழமையாய் இம்மொழிகள்
எழில்வாய்ந்த வாழ்க்கையினை எமக்குத் தருமே

வேந்தனுக்கோ ஆளுகின்ற மண்ணினில் தனிச்சிறப்பு
மாந்தருக்கோ மொழிஆண்டால் சென்றஇடமெல்லாம் சிறப்பு
காந்தமாய் ஈர்க்கின்ற பிறமொழிகள் கறறிடுவீர்
பாந்தமாய் வாழ்வும் அமைந்திடுமே பார்த்திடுவீர்

அவனியிலே பலமொழிகள் அழிகின்ற அவலம் இன்று
அரங்கேறும் கோலம் தரித்து நிற்கும் இங்கு என்று
அன்னையவள் பாலோடு ஊட்டிவிட்ட இனியமொழி
அழிந்தொழிந்து போகும் அநியாயம் அறிந்திடுவீரோ?

எனக்குள்ளும் வந்தது வசந்தம்

எரிக்கும் கோடையில் மனம் அனலாய் தகிக்க
எழிலாய் நின்ற இலைகள் உதிர, என் மகிழ்வுகளும் உதிர
உறைய வைக்கின்ற குளிரின் வரவில் மனமும் உறைந்துபோக
உளம் களிக்க வந்ததுவே வனப்புள்ள வசந்த காலம்

மலர்கள் கோலோச்சும் மகிழ்வான வசந்த காலத்தில்
மனதிலும் மகிழ்ச்சி கோலோச்சும் மர்மந்தான் என்ன?
விதவைக் கோலத்தில் ஓங்கி வளர்ந்த விருட்சங்கள்
விரைந்து தம் அழகுக் கோலத்தை மீளப் பெறுவதனாலோ?

எழிலான பூக்கள் கண்டு எனக்குள்ளும் வந்தது வசந்தம்
எத்தனை அழகு ஆண்டவன் தோட்டத்திலே என்றேன்
வாழ்க்கையில் தொலைத்துவிட்ட மகிழ்ச்சிக்கு ஈடுசெய்ய
வந்துள்ளதோ வசந்தமென்று சிந்தி னையை ஓடவிட்டேன்

வசதிகள் நிறைந்திருந்தால் வாழ்க்கையென்றும் வசந்தந்தான்
வரவுகள் செலவுகளை முன்தள்ளினால் வருவது கோடைதான்
வந்தது எமக்குள்ளே வசந்தமென்ற உவகை மனதில் பொங்க
வளமான வாழ்க்கை அமைத்து உளம்மகிழ வாழ்வோமா?

மறக்கத்தான் முடியுமோ சொல்மனமே

மனிதமனத்தின் வேதனைக்கு
மறதியொன்றே நல் ஒளடதம் என்பார்
மனதில் வலிப்பதை மறந்திடலாம்
மற்றோர் பிழைகளையும் மன்னித்து மறந்திடலாம்
மதியாதோர் முற்றம் வேண்டாமெனவும் மறந்திடலாம்
மமதையுணர்வு கொண்டோர் பேதமையையும் மறந்திடலாம்
மண்ணின் நேசத்தை மறக்கத்தான் முடியுமோ சொல்மனமே

அன்னை மொழி மறக்கின்ற அநியாயம் இங்கு வேண்டாம்
அடுத்த மொழி மோகம் எங்கள் கண்ணை மறைக்கலாமோ
அறிவாளி என்று நாம் அடிக்கடி பீற்றிக் கொண்டாலும்
அருமையான தாய்மொழி அறிவு இலலாத அறிவீனம்
அவைதனில் எங்களை இனம்காட்டும் அழகு தமிழை
அன்பர்கள் நாம் மறக்கததான் முடியுமோ சொல்மனமே

நாம் நாமாக இருந்தால் நலமாக என்றும் இருப்போம்
நாடு மாறியதால் நம் கோலங்களும் மாறலாமோ
நாசமாகி விடலாமோ நாம் கட்டிக்காத்த கலாச்சாரங்கள்
நாவடக்கம் நம்மை விட்டு தொலைதூரம் போகலாமோ
நாளும் பொழுதும் கட்டிக்காத்த நம் கலாச்சாரங்களை
நாம் இந்த மணணில் மறக்கத்தான் முடியுமோ சொல்மனமே

பச்சை நிறமே பச்சை நிறமே

பச்சையிலே நான் கொண்ட இச்சையாலே
பலரோடும் கவியொன்றைப் பகிர்கின்ற ஆசையோடு
பரந்து விரிந்த இந்தப் பார்தனிலே
பசுமை கொண்ட இந்த நிறம்பற்றி இங்கு பகர்கின்றேன்.

வசந்தத்தின் வரவுகண்டு வாயாரச் சிரிக்கின்ற மலர்களிலும்
வயல்வெளியை நிறைத்து நிற்கும் பல பயிர்களிலும்
வசப்படுத்தும் பச்சை நிறத்தின் ஆளுமை கண்டேன்
வனப்பூட்டும் வர்ணத்தின ஜாலமதில் வாய்பிளந்தேன்.

உண்டி சுருங்கிட்டால் மேனிக்கு அழகு என்பார்
உணபதில் பச்சைக் காய்கறிகளும் சேர்த்துக்கொள் என்பார்
உடல்நலத்தில் கூட பங்குகேட்கும் பச்சை நிறமே
உன் உயரவுகண்டு உளமார வியக்கின்றேன்

அவசரமாய் சாலைகடக்க உன்வரவு தேவையன்றோ
அங்கே நீ பல்லிளித்தால்தான் அடியேனுக்கும் அனுமதி
ஆபத்து இங்கில்லையென்று அடிக்கடி சமிக்ஞை காட்டும்
அற்புத பச்சை வண்ணமே நீ வர்ணங்களின் ராஜாவோ

நல்லது பலவற்றை நான்இங்கே நயமுடன் உரைத்தாலும்
நன்றிகெட்ட உலகம கடைந்தெடுத்த பொய் சொனனால்
நரம்பில்லாத நாக்காலே பச்சைப் பொய் சொல்லாதேயென
நடுத்தெருவுக்கு உன்னை வம்பிழுப்பதுதான் அடியேனின் மனக்கிலேசம்

வித்தைகாட்டும் விரல்கள்

நாக்கு மூக்கு என்று பல உறுப்புகள்
நம்முடலில் இருந்திட்ட போதினிலும்
நான இந்த விரல்களை நினைத்து நாள்தோறும் பெரிதாய் வியக்கின்றேன்

அரங்கில் அரம்பையொருத்தி ஆடுகின்றாள்
அபிநயிக்கும் அவள் விரல்கள் அதிசயம்
அற்புதமாய் விரல்கள் முத்திரைகள
அங்கே பதிக்கின்ற அழகினில் மயங்குகிறேன்

இங்கேயொரு ஓவியனைக் காண்கின்றேன்
இவன் விரல்கள் தூரிகையைப் பிடித்து நிற்க
இத்தனை அழகாய்ச் சித்திரங்கள் வரைகின்றான்
இறைவன் படைப்பினில் இவன் விரல்கள் அற்புதந்தான்

எழுத்தை ஆள யாசிக்கின்ற என்னைப் போன்றோர்
எண்ணியதெலலாம் ஏற்றமுடன் எழுதித் தள்ள
என்றுமே இருப்பது இநதக்; கைவிரலகள்தானே
எப்படி இதை நாம மறபபோம்

இசையில் மயங்காதோர் யாருண்டு இந்தப் பாரினிலே
இனிமைதனைச் செவிக்களிக்க இசைக்கருவிதனை மீட்ட
இங்கு யார் வந்து நிற்பார்
இதற்கும் தேவை அந்த விரல்கள்தானே
இப்படியாய் இந்த விரல்கள் செய்யும் வித்தைகளோ
இகத்தினில் ஏராளம் ஏராளம்

புத்தாண்டே வருக

இன்று போய் நாளை வா
இப்படி நான் சொல்லவில்லை
இனியும் வரவேண்டாம்

இங்கிருந்து போய்விடு
இனிக்கவில்லை இந்த ஆண்டு
இனியாவது இனிக்கடும்
இருக்கும் ஆண்டே போய்விடு
இருள் அகனறு ஒளிபிறக்க
இனனொரு ஆண்டு இங்கு வரட்டும்.

உயிர்ப் பலிகள் ஏராளம்
உடமைகளும் பெரிதாய் சேதாரம்
உலகெங்கும் அமைதி இல்லை
உன்னை எங்ஙனம் நேசிப்பேன்
உள்ளத்தில் உவகையில்லை
உண்மையாய் வெறுக்கின்றேன்
உவந்து வரவேற்போம்
உலகிறகு ஒரு புத்தாண்டை.

சமாதானக் காற்று வீசட்டும்
சண்டைகள் நன்றாய் ஒழியட்டும்
சஞ்சலங்கள் யாருக்கும் வேண்டாம்
சர்வலோகமும் மகிழ்வாய் கைகுலுக்கும்
சரித்திரம் நாம் படைப்போம்
சக்தி பராசக்தி அருள்புரிவாயே
சந்தோஷ ஆண்டொன்று மலர்ந்திடவே
சர்வேஷ்வரா நீ அருள் தருவாயே

புதுச்சட்டை போடுகிறாள்

புதிதாக எதுவந்தாலும் பூரிப்பும் இணைந்து வருவதுண்டு
விதிவிலக்காய் எதுவுமே பொதுவாய் இருப்பதில்லை
இதிலொன்றாய் பூமாதேவி இனியொரு புதுச்சட்டை போடுகிறாள்
அதிலொன்றாய் அங்கேயொரு புத்தாண்டும் மலர்கின்றது.

புதியன வந்து புகுவதும் பழையன போய்க் கழிதலும்
புவலயத்தில் எனறுமே மானிடர்க்கு புதியாய் இருந்ததில்லை
புளகாங்கிதம் தருகின்ற புதிதான விடயங்கள் நமககென்றும்
புலத்தினில அவசியம் தேவையென்றும் அறிந்திடுவீர்

நாட்காட்டி நனறாய் கிழிபட்டு முக்கால் நிர்வாணமாய் நிற்கின்றது
நாளையொரு புதுச்சட்டை வேண்டுமென்று அடம்பிடிக்கின்றது
நானிலமே புதிதாக, நாட்காட்டி மட்டுமென்ன விதிவிலக்கா?
நாமொரு புதுசசட்டை நாட்காட்டிக்கு போட்டு அணிசேர்ப்போமே!

தேவமைந்தன் வந்துதித்தாரே

எளிமையின் வடிவமாய்
எமக்கொரு யேசுபாலன்
எம் பாவச்சுமை தாங்கிடவே
எக்காளம் வானில முழங்கிட
எம்பெருமான் யேசுபிரான்
எங்கோ ஓர் தொழுவத்திலே
எமக்காய் வந்துதித்தாரே.

இருக்கின்ற தீமைகள்
இனறோடு ஒழியட்டும்
இனியிங்கு நனமைகள் பிறக்கட்டும்
இகத்தினில் போரது ஒழியட்டும்
இல்லத்தில் மகிழ்வது ஒளிரட்டும்
இவற்றையெல்லாம் சொல்லத்தான்
இன்று பாலன் பிறந்தாரே

ஒற்றுமை இங்கு செழிக்கட்டும்
ஒழியட்டும் இங்கு கயமைத்தனங்கள்
ஒளிவிழா இதுவென்ற காரணத்தால்
ஒளிருவோம் நாமும் இல்வாழ்வில்
ஒன்றே குலம் ஒன்றே மதமென்று
ஒருமித்த கருத்துடனே வாழ்ந்திடுவோம்
ஒருபோதும் வஞ்சனைகள் வேண்டாமென்று
ஒருமித்த குரலினில் செப்பிடுவோம்

பாலன் யேசு வந்துதித்தாரே இன்று
பாவிகளை இரட்சிக்க இன்று வந்துதித்தாரே
பாரினில் சமாதானம் என்றும் நிலைத்திடவே
பாலன் யேசு இன்று வந்துதித்தாரே
பாலன் யேசு வந்துதித்தார் என்று
பாட்டுக்கள் பாடி சேவிப்போம் அவரை

வாசிப்பதை நேசிப்பீர்களா

வயிற்றுப்பசி தீர்க்க வகைவகையாய் உணவைத் தேடுகின்றோம்
வருந்தி உழைப்பதில் பெரும்பகுதி உண்டிக்காய் போகின்றது
வறுவலும் பொரியலும் அவியலும் சுண்டலும் என்றாகி
வயிற்றை நிரப்புவதில் குறியாக நிற்கின்றோம் நாம்.

பசிப்பதில் புசிப்பதில் தவறில்லை கண்டிடுவீர்
படிக்கின்ற பசியும் பலருக்கும் தேவை என்பதை அறிந்திடுவீர்
பலதையும் வாசித்த நல்லதொரு பழக்கம் ஏன் இன்றில்லை
பத்திரிகை, சஞ்சிகை என்று வாசிப்போர் அருகியது ஏன்தானோ

நேசிக்க வேண்டியதில் நல்ல நூல்களும் அடக்கம் என்றறிவாய்
நேரமுள்ள போதெல்லாம் நானகு வரிகளேனும் வாசித்திடுவாய்
நேறறைய பொழுது நாளை என்றும் வராது என்று அறிவீர்தானே
நேரிய படைப்புகள் ஆயிரமுண்டு தேடி வாசிக்கப் பழகிடுவீர்

கற்றது கடுகளவு கல்லாதது உலகளவென்று நாம் அறிவோம்
கணணிருந்தும் குருடர்களாய் நாம் இங்கு வாழ வேண்டாம்
கணக்கில அடங்கா நூல்கள் நம்மைச் சுறறி இருக்க
கருத்துடனே இன்றுமுதல் என்றுமே வாசிப்பதை நேசிப்பீர்களா?

புலத்தில் தமிழ் மொழி இனத்தின் முகவரி

முகவரிகள் அற்ற மடல்கள் போகுமிடம் யாரறிவார்
முகமிழந்த மனிதர்களை இனங்காண எவரறிவார்
மொழியொன்றில் நமக்கு மோகந்தான் இல்லையெனில்
அழிகின்ற நிலைதான் எஞ்சும் அதை நீயறிவாயோ

புலம்பெயர்ந்த மண்ணினிலே புதுமொழிகள் பேசுகின்றோம்
பலம்சேர்க்கும் மொழி அறிவு வாழ்விறகு அவசியந்தான்
பிறமொழிகள் கற்கின்ற பெருவிருப்பு வந்ததினால்
மறந்திடலாமோ நாம் இங்கு நம் தாய்மொழிதன்னை.

இனத்தின் முகவரியாய் இருப்பதுவோ அதன் மொழிதான்
இந்த மொழிஅறிவு இல்லையென்றால் இனமே இல்லை
இனிய தமிழ்மொழியே இனி உனக்கு வேண்டாம் மரணம்
இங்குள்ளோர் இனி என்றும் பேசட்டும் இனிய தமிழை.!

உதிர்கின்ற காலம் இது.....

நேர்த்திக்கடன் எதற்கு நேசமுள்ள விருட்சங்களே
நேற்று நிறைத்த இலைகள் இன்றில்லையே
விரும்பி ஏற்றதுவோ இந்த விதவைக்கோலம்
விழிகள் நிறைய கண்ணீர் பனிக்கின்றதே

மாறுகின்ற காலத்தின் மற்றுமொரு கோலமிது
மானிடனே மகிழ்வுடன் இதையுமநீ ஏற்றிடுவாய்
இன்பமும் துன்பமும் இடையிடையே வருவதுபோல்
இயற்கையின தூரிகையில் இதுவுமொரு சித்திரமாம்

மலர்கள் இலைகளென்று எழிலோடு நின்றீர்கள்
மற்றும் சுவையான கனிகளையும் சுமந்தீர்கள்
இன்று மொட்டையாய் நிற்கின்ற நிலைகண்டு
இந்த உள்ளம் வேதனையால் வாடலாமோ

உள்ளது உதிர்வதும் பின்பு புதியாய் முளைப்பதும்
உலக நியதி என்று உனக்குத்தான் தெரியாதோ
பழையன கழிந்து புதியவை பல புகுவதும்
பாரினில் தினம் தினம் நிகழ்வது நீ அறிவாயோ

இடைவெளிகள்

அடுக்கடுக்காய் அந்த வீட்டில் பிள்ளைகள் பெற்றதற்காய்
அடுத்த வீட்டுக்காரர் அடித்துக் கொள்கிறார் தலையினிலே
அடுத்தடுத்து குழந்தைகள் வந்து சேர்கின்ற காரணத்தால்
அடுக்களையில் பூனை தூங்கும் நிலையும் வரலாம்
அடுத்த பிள்ளைக்கு இடைவெளி ஒன்று இல்லாதவரை!

படிப்பினில் ஆர்வம் பாமரனுக்கு என்றுமே தேவை
படிப்படியாய் முன்னேற இந்தப் படிப்புத்தானே நம் பலம்
கற்கின்ற ஆசைகூட தடையின்றித் தொடர்ந்தால்தான்
கற்றதன பலனைக் கண்கூடாய்க் கண்டிடலாம்
வெற்றிடமாய் இடைவெளியொன்று வேண்டாம் அங்கே!

நட்பென்ற மலர் பூத்தால் வாழ்க்கையில் வசந்தந்தான்
நட்டாற்றில் விட்டுச் செல்லா நட்புகள் அற்புதந்தான்
நட்டமரம் நாளை ஒருநாள் கனிதரும் என்பதுபோல்
நட்புறவும் நல்லகனிகள் நன்றாய் தரும் என்றாலும்
நட்புறவில் என்றும் வேண்டாம் நாலுகஜ இடைவெளிகள்!

முயற்சிகள் இருந்திட்டால் முன்னேற்றம் என்றுமே நிச்சயந்தான்
முயலொன்றை ஆமையொன்று வென்றது முயற்சியால்தான்
வியக்கவைக்கும் விந்தைகளுக்கு வித்தாவது விடாமுயற்சிதானே
மயக்கவைக்கும் மற்றவைகண்டு மனிதா நீ ஒருபோதும்
தயக்கம் காட்டி தந்துவிடாதே இடைவெளிகள் தன்னை!

மருந்தும் விருந்தும்

தாயற்ற வாழ்வு தரணியில் வேண்டாம்.
காயற்ற மரத்திற்கு கல்லெறியும் வேண்டாம்
சேயற்ற மணவாழ்வு யாருக்கும் வேண்டாம்.
வாயற்ற ஊமைகளாய் வாழநதிட வேண்டாம்
நோயுற்ற ஊனும் நமக்கு வேண்டாம்.

உண்டி சுருங்கிடின் உடலுக்கு நலமென்பார்
எண்ணித் துணிதல் நலமென்று உரைப்பார்
பெண்ணிற்கு பேரழகு அவளின் அடக்கமென்பார்
மண்ணிற்கு வளமாம் அதன் கனிமங்கள் காணீர்
எண்ணும் எழுத்தும் என்றுமே கண்கள் என்பார்

விருந்துகள் பலவடிவில் வாழ்வில் வருவதுண்டு
மருநதென அமைநதிடின் மயக்கங்கள் குறைவதுண்டு.
இருந்தெமை இம்சிப்பது இவ்வுலகில் பிணிகள்தாம்
வருந்திநாம் வாடுவது நோய்களின் பிடியில்தான்
பிருந்தாவனம் வாழ்வில் பாலைவனம் ஆகலாமோ?

வேகவைக்கும் வெயிலப்பா...

வறுத்தெடுக்கும் வெயிலிலே வாடிநிற்கும் வேளையிலே
வெறுக்குதப்பா வாழக்கையப்பா வேகவைக்கும் வெயிலினால்!
பொறுக்க முடியவில்லையே பொல்லாத வெயில்தன்னை
சிறுக்கன் இவன் சீறறம் என்றுதான் தணியுமப்பா?

கருகாத குறையாக விருட்சங்கள் பெரிதாய் வாட
உருமாறும செடிகொடிகள் உக்கிரமாய் எறிக்கின்ற சூரியனால்
வருவாயே வருணபகவானே தாகம் தீர்க்க என்றரற்ற
நெருப்பெனக் கோடை இங்கு தகிப்பது ஏனோ?

எரிக்கின்ற வெயிலென்று எல்லோரும் தகிக்கின்ற பொழுதினிலும்
உரித்த கோழிகள்போல் பாவையர்கள் பவனிக்குப் பஞ்சமில்லை
சிரித்த முகங்களுடன் சிக்கனமாய் சிறுசுகள் ஆடை அணிந்து
விரிக்கின்ற மாயவலையில் வீழ்ச்சிதனைக் கண்டிடாதீர்!

காலம் பொய்க்கின்ற கோலம் இன்று நீர் கண்டீரோ?
ஞாலம் எங்கும் அழிவுகள் வருவதை அறிந்தீரோ?
பொய்யும் களவும் போரும் சூதும் பெருகிய காரணத்தால்
மெய்யும் மேன்மையும் அருகி மேதினி இன்று அழிகின்றதே!

எனக்குள் இப்படியொரு ஆசை

மனிதனை மனிதன் மாய்க்கின்ற போரும் வேண்டாம்
மதவெறிகள் மலிந்து கிடக்கின்ற பாரும் வேண்டாம்.
இனவெறியால் பூசலகள் கிளப்புகின்ற யாரும் வேண்டாம்
எனக்குள் இப்படியொரு ஆசை எடுத்தியம்பலாமோ என்பரமே

வறுமைப்பிடியில் யாரும் இங்கே வாடவேண்டாம்
வருத்துகின்ற நோய்நொடிகள் எவருக்கும் வரவேண்டாம்
பிரிந்து வாழும் பெருங்கொடுமை இனி வேண்டாம்
எனக்குள் இப்படியொரு ஆசை எடுத்தியம்பலாமோ என்பரமே

தாய்மொழி உதாசீனம் யாருக்கும் வந்திட வேண்டாம்
தரணியில் எவருக்கும் கேடு நினைத்திட வேண்டாம்
தன்மண்ணை மறக்கின்ற கேவலநிலை எங்கும் வேண்டாம்
எனக்குள் இப்படியொரு ஆசை எடுத்தியம்பலாமோ என்பரமே

ஆயிரமாயிரம் ஆசைகள் எனக்குள்ளே முளைவிட்டாலும்
அவையெல்லாம் பலித்துவிடும் என்பதில் நிச்சயமேது
அற்பன் எனது ஆசைகளெல்லாம் நிராசையாகிட வேண்டாம்
அடியேனுக்குள் இப்படியுமொரு ஆசை அருள்தருவாயா ஆண்டவனே

ஆசைகளும் நிராசைகளும்

ஆசைகள் ரூபங்கள் பலவாய் அடிக்கடி வந்ததுண்டு
அடையக் கிடைக்காததால் குட்டிகள் ஈன்றதுமுண்டு
ஆசை நிறைவேறாதா என்ற ஆசைகளே அதிகமாகி
அடிமனதில் புதைந்து மறைந்து மறந்ததும் உண்டு

நியாயமான ஆசைகள்ததாம் வந்திட நான் புத்தனுமல்ல
நித்திரை வரமறுத்த இரவுகளில் வந்திட்ட ஆசைகள்
நிம்மதியைக் குலைக்க வந்து சேர்ந்ததும் உண்டு
நினைத்துப் பார்த்தால் மறக்கத்தான் தோன்றுவதுண்டு

திருட்டில் கிடைப்பதற்கு ஏனிந்தத் தனிச்சுவை
திரும்பிப் பார்க்கிறேன் பழைய நினைவுகள் தன்னை
திருந்தச் சொன்னாலும் செவிசாய்க்கும் பக்குவமும் அங்கில்லை.
திருமண பந்தந்தான பின்பு மனதை ஒருமனதாக்கியதோ

வயதுப் பிள்ளையின் வாலிப விளையாட்டுக்கள்
வலிந்து வம்பை விலைக்கு வாங்கும் பருவ வயது
வரவு மீறி செலவுசெய்யத் துடிக்கின்ற வாலைப்பருவம்
வந்தபின் பார்ப்போம் என்ற அலட்சியப் போக்கு

அந்த வயதின் ஆசைகள் அதிகம் நிராசை ஆகியதால்
அடியேன் இந்த வயதில் ஆசைளைச் சுருக்கிக கொண்டேன்
ஆசையே அழிவுக்கு அடிகோலும் என்ற ஞானம்
அடக்கி வைக்கினறது ஜனிக்கின்ற அதீத ஆசைகள்

ஆச்சரியம் ! ஆனாலும் உண்மை

நம்மைச் சுற்றித் தினமும் நாலும் நடக்கும்
நல்லதும் இருக்கும் அதில் கெட்டதும் இருக்கும்
உணர்ச்சிகளை அவை நன்றாய்க் கிளறும்
உண்மைதானோ இதுவென்ற மயக்கம் தரும்

எப்படி இது சாத்தியம் என்றெல்லாம் வியக்க வைக்கும்
எல்லோரும் ஏறகாத நிகழ்வென்ற நினைப்பும் வரும்
ஆனாலும் அந்தந்த நிகழ்வுகளின் அற்புத நிஜங்கள்
ஆச்சரியம் அளிப்பதில் எனறுமே தவறுவதில்லை.

இராட்சத உருவமொன்று இறக்கை விரித்துப் பறக்கின்றது
இருளைப் பகலாக்க மின்சாரம் என்னும் மாயாஜாலம்
நானகு சுவருக்குள்ளே வானொலியின் உலகவலம்
நாட்டுநடப்புகளை ஒளியாக உமிழ்கின்ற தொலைக்காட்சி

விரல்நுனியில் உலகத்தை இழுத்துவரும் இணையம்
விந்தைகள் செய்கின்ற வியபபூட்டும் மருததுவர்கள்
இப்படியாய் ஆச்சரியங்கள் ஆயிரமாயிரமாய் இருந்திடினும்
இவையாவும் நிச்சயமாய் உணமைகள்தான் அறிந்திடுவீர்.

அவசர உலகம் இது.....

எதிலுமே அவசரம் இன்று எங்குமே அவசரம்
எண்ணித் துணிவார் எண்ணிக்கையில் குறைகின்றார்
உண்பதிலும் அவசரம் உடுப்பதிலும் அவசரம்
உளமார்ந்த காதலின்றி திருமணத்திலும் அவசரமே

சிந்தித்துச் செயலாற்ற சிரமங்கள் பலவென்று
சினத்துடனே பணிகளைச் செய்கின்றார் அவசரமாய்
விரைகின்ற விபரீதம் வீணாக நம் வாழ்வினிலே
விபத்துக்கள் பலவற்றை தந்திடுமே அறிந்திடுவீர்

அவசரக் குடுக்கைகள் வாழ்வே என்றும் நாசந்தான்
அறியாத பேதைகளே உங்கள் வாழ்வே அநியாயந்தான்
நின்றுநிதானித்து கருமங்கள் நீர் செய்திட்டால்
நினைத்தவை என்றும் சிறப்பாய் நிறைவுறும் காணீரோ

வேகம் என்பது கலந்துவிட்டால் உன் விவேகம்
வேண்டாத ஒன்றாகும் என்பதிலே பலருக்கும் வேதனைதான்
ஆமையொன்று மெல்லச் சென்றும் பந்தயத்தில் ஜெயித்ததன்றோ
ஆதலின் வேண்டாம் இந்த அவசரம் அன்பா உனக்கு.!

சிலுவையின் பாதையிலே

மானுடமே உனைமீட்க மனுவடிவில் ஏசுபிரான்
மண்ணுலகில் அவதரித்து சிலுவையும் சுமந்தாரே
நாம் சுமக்கும் பாவப்பொதி அகற்றுகின்ற கருணையில்தான்
நாயகனாம் ஏசுபிரான் நமக்காகச் சுமந்தார் சிலுவை.

பாதை தவறிப் போகின்றாயே பாவிமனிதா
பரலோக வாழ்வினிலே பற்றில்லையா உனக்கு
சிலுவை சுமந்து பாதை தந்தார் அந்த நேசன்
சீரான வாழக்கை தர மனிதா உன்னால் முடியாதா

முள்முடி தலையில் தரித்து முகமதில் குருதி வழிந்து
மும்முறை சிலுவையுடன் தரையில் விழுந்து
ஆணிகளால் சிலுவையில் அறையப்பெற்று
ஆண்டவன் உனக்காய் உயிர்விட்டது அறிவாயன்றோ

வாழ்வே நமக்கொரு சிலுவைதான் அறிந்திடுவாய்
வந்திடும் சுமைகளை ஏற்றிடக் கற்றிடுவாய்
பாரம் சுமந்திடும் பண்பாய் வாழ்வை அமைத்திடுவாய்
பரமபிதா சென்ற பாதையே உன்பாதை என்று ஏற்றிடுவாய்.

இன்னும் இன்னும் வேண்டும் இறைவா

பற்றுக்கள் அருகிட்டால் வாழ்க்கையில் பரவசமே
பாவிமனிதா உனக்கிந்த ஞானம் வந்திடாதோ
இன்னும் வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றாய்
இருபதில் திருப்தி கண்டால் இன்பந்தான் பெருகாதோ?

அடிமனதில் ஆசைகள் பல அடிக்கடி ஜனித்திடவே
ஆசித்தும் நேசித்தும் அடைகின்ற பெரு ஆவலிலே
ஆண்டவனை அயராது அழுதழுது வேண்டி நின்று
அளித்திடுவாய் அனைத்தையுமே என்று நாம் அரற்றலாமோ

போதுமென்ற மனமே பொன்செயும் மருந்தன்றோ
ஏதுமின்றி வாழ்பவனுக்கு ஏக்கங்கள் எனறுமில்லை
இல்லையென்று இருப்பவனுக்கு இருந்திடா இடர்கள்
எல்லையின்றி எதையுமே நேசிப்பவன்பால் இருப்பதேனோ?

இன்னொரு இரண்டுகால் விலங்கினமோ?

நாட்டு மனிதர்கள் நம்மில் பலர்
காட்டு மனிதர்களோ என்று கலங்குகின்றோம்
காரணம் என்னவென்று அறியவிழைந்தால்
பூரணம் இல்லாத மானிடன் தெரிகின்றான்.

மனிதஜாதியிலே பஞ்சமின்றி பலமிருகக் குணங்கள்
தனித்துவமாய் மனிதருக்குள் இவை தாவித்திரிய
நரியொத்த வஞ்சகர்களாய் நாலுபேர் ஒருபக்கம்
கரிபோல பழிவாங்கும் கயவர்கள் மறுபக்கம் கண்டீரோ

தாவிப்பாயும் புத்திகண்டு மந்தியோ நீயென்கிறான்
பாவிப்பயலே கழுதையடா நீ என்றும் திட்டுகின்றான்
அருமைப் புத்திரனாய் இருந்திட்ட போதினிலும்
எருமைப் பயலே எனறல்லோ அர்ச்சனை செய்கின்றான்.

வீட்டுக்குள்ளே வதிகின்ற மனிதா உனக்கு
காட்டுக்குள் வாழ்வதுதான் பொருந்தி வருமோ
ஏட்டுப்படிப்பு என்று நிறைய உனக்கிருந்தாலும்
ஏனுனக்கு இந்த மிருகக் குணங்கள் எடுத்தியம்பாயோ?

காதலர் தினம் எதற்கு?

தினம் தினம் வயிற்றுப்பசி தீராப் பேரவலத்தால்
மனம்நொந்து மடிகின்றோர் அவனியில் ஏராளம்
தனம் அதிகம் தம்மில்உள்ள தலைக்கனத்தில்
தினம் ஒன்றைக் காதலர்க்காய் தருவது தரமமாமோ

காதலிக்கத் தெரியாத கல்நெஞ்சன் இவனாவான்
ஆதலினால் அத் தினத்தை அநியாயம் என்கின்றான்
பேதலித்த இவன்பேச்சு நமக்கு எதற்கு என்றெல்லாம்
காதலர்கள் என்மீது வசைபாட வரவேண்டாம்.

தனியாக நமக்கெதற்குத் காதலிக்கத் தினமொன்று
இனிக்கின்ற வாழ்வினிலே இல்லையே காதல்பஞ்சம்
புனிதமான காதல் உணர்வால் நாளெல்லாம்
பூத்திடுமே ரோஜாக்கள் நம்வாழ்க்கைத் தோட்டத்திலே.
காலமெல்லாம் காதல்மலர்கள் பூக்கட்டும்.

மலிகின்ற மரணங்கள்

கல்நெஞ்சா உனக்கு காலதேவா
கண்ணீரில் பலரை நனையவைத்து
கண்மூடித்தனமாய் பல உயிர்கள் பறித்து
கதிகலங்க வைக்கும் காரணந்தான் எதுவோ?

பல்கிப் பெருகிவிட்ட பயங்கரவாதம் பசியாற
பாவி மனிதன்தான் வகையாய்க் கிடைத்தானோ
பார்க்குமிடமெல்லாம் பரிதாப மரணங்கள்
பசியாறும் பயங்கரவாதமே கடிவாளம் உனக்கில்லையா?

குண்டுகள் திக்குத்திக்காய் வெடித்துச் சிதற
குருதிஆற்றில் பலர் இன்று குளிக்கின்றார்
கூடடங்கூடடமாய் மனிதப் பலியெடுக்கும்
கூற்றுவனே உனக்கு ஈவிரக்கம் கிடையாதோ?

உயிரே உன் விலைதான் என்ன அறியலாமோ
உன்னை இன்று உலகச்சந்தையில் மலிவாக்கி
உலகெங்கும அநியாயமாய் விலைபோக
ஊமையாகி மனிதம் நிற்பது கண்டாயா?

வெறிபிடித்த மனிதா உனக்கு
வேண்டாம் இந்த வன்முறைக்கோலம்
வெட்டிச் சாய்ப்பதும் வெடிகுண்டு வைப்பதும்
வேண்டாம் மனிதா உனக்கு வேண்டாம்
வேறுபல நற்பணிகள் நமக்கிருக்க
வெட்டிச் சாய்ப்பதும் வெடிகுண்டு வைப்பதும்
வேண்டாம் மனிதா உனக்கு வேண்டாம்.

நினைவிருக்கும்வரை...

நினைவு என்று வரும்வேளையில்தான்
மறதியின் மகிமையே தெரிகின்றது
நீங்க மறுக்கும் சோக நினைவுகள்
மனதை விட்டகல்வது மறதிகொண்டுதானே

வாழ்க்கையின் நினைவுகள் எல்லாம் வசந்தங்கள் இல்லை
வாழ்த்திப் புகழ்வோர் மாத்திரம் வந்து போவதுமில்லை
விரிசல்கள் உறவிலும், விரும்பாத பிணிகளுமாக
வரிசையாக வந்து போகும் கோடைகளும் உண்டன்றோ

சுகமும் சுமையும் நினைவுகள் இருக்கும்வரைதானே
இகமதில் இறப்பு வந்திட்டால் நினைவிழந்த நிலைதானே
அகமதில் நிறைந்து கிடக்கும் நினைவுகள்தன்னை
நகமதைக் களைவதுபோல் வெட்டியெறிய முடிவதில்லையே

மறக்கத்தான் தகுமோ என்று கேட்கின்ற நிலையோடு
மனதில் நினைவிருக்கும்வரை இருந்திடும் சில நிகழ்வுகள்
மற்றவை மனதினில் குடியிருக்க வேண்டாமென்று
மறதியே நின்துணை வேண்டி இரந்து நிற்கின்றேன்.

காற்றினிலே வரும் கீதம்

கவியெழுதக் கருதேடி காலாற நடந்த பொழுதில்
காற்றெனனை தென்றலாய் வருடிச் செல்ல
கண்டேன் கருவொன்று என்றுள்ளம் களிப்பெய்த
கணப்பொழுதில் வந்துவிட்ட கருப்பொருளை
கவினுறு வார்த்தைகளால் அலங்கரிக்க முனைகின்றேன்

அசைந்தாடும் தென்றலாய் நீ வந்து முத்தமிட்டால்
அந்த இதமான சுகம்கண்டு மெய்மறந்து நிற்கின்றேன்.
ஆகரோஷம் தருகின்ற புயலாய் நீ எதிர்கொண்டால்
ஆவேசம் உனக்கெதற்கு என்ற கிலேசத்தில் மருளுகின்றேன்

துளையிட்ட மூங்கிலுள்ளே நீ நுழைந்தால்
துள்ளவைக்கும இசையாக நீ வருகின்றாய்
தூரத்தில் எழுகின்ற பல்வேறு ஓசைகளைக்
தூக்கிவந்து காதினில் நீ போடுகின்றாய்.

நறுமலர் வாசனையை நீ அள்ளிவந்தால்
நன்று நன்றென்று போற்றுகின்ற நமமவர்கள்
நாறுகின்ற துர்வாசம் கொண்டுவந்து சேர்த்திட்டால்
நாளெல்லாம உன்னை வசைபாடலாமோ

காற்றடைத்த பையென்றார் நம்உடலை பட்டினத்தார்
காற்றெனும் மூச்சிழந்தால் கட்டையில்தான் கருகிடுவோம்
காலத்தைத் தவறவிட்டு கலங்குகின்றார் பலர் இன்று
காத்திருப்பதில்லை காலம் நமக்காக இங்கு
காற்றுள்ளபோதே தூற்றிக்கொண்டால் கவலை நமக்கெதற்கு?

ஏணிகள் ஏறுவதில்லையே

ஆணி கொண்டு யேசுவை அறைந்திடவே
ஏணி கொண்டு அன்று ஏறினார் சிலுவை மரத்தினிலே
தோணி கூட என்றோ ஒருநாள்
தொலைதூரம் போக ஓடத்தில் ஏறிடுமாம்
நாணி நிற்கும் மங்கையவளும்
நாட்டியமயிலாய் நாளை மேடை ஏறிநிற்பாள்
எவரையுமே ஏற்றிவைக்கும் இந்த ஏணி
ஏறியதாய் எவர்தான் சொல்வார்?

ஏற்றியதால் உயர்ந்து நிற்கும் மானிடமே
தூறறலாமோ உங்களை ஏற்றிவிட்ட ஏணிகளை
போற்றுகின்ற பெருமனது இல்லையென்ற காரணத்தால்
சேற்றினையே வீசுகின்ற செயலெதற்கு சொல் நண்பா

கால்கள் இல்லையென்றால் கதிரைதான் நமக்கெதற்கு
நூல்கள் இல்லையென்றால் அறிவுப்பசி தீர்வதென்று
வால்கள் இல்லையென்றால் பட்டங்கள் பறப்பதென்று
வேல்கள் இல்லையென்றால் வீரருக்கு போரெதற்கு?

வாழ்க்கைப் பயணத்தில் அவசியம் வேண்டும் ஆதாரம்
வீழ்ச்சியும் தரலாம், உயர்வும் தரலாம் அந்த ஆதாரம்
ஏறிமுடித்தவர்கள் எட்டி உதைக்கலாமா ஏறிவந்த ஏணிதன்னை
காறித்துப்பலாமோ உச்சிகண்ட கர்வம் தலைக்கேற
ஏணிகள் பாவம் என்றுமே ஏறுவதில்லை
ஏறியவர் எள்ளிநகையாடும் ஈனச்செயல் நமக்கு வேண்டாமே

கேள்விக்குறிகள்

வாழ்வே நமக்கொரு கேள்விக்குறியா
வீழ்ந்தவர்கள் எழுந்துநிற்க மாட்டோமா
தாழ்ந்தவர்கள் இனி உயரமாட்டோமா
பாழ்பட்ட நம் பிறந்தகந்தான் சிறக்காதோ

இன்றைய தேக்கம் நமக்கொரு முழுத்தரி;ப்பா
நன்றாய் வாழ்ந்த நற்பொழுதுகள் திரும்பாதா
ஒன்றாய் என்று உறவுகளுடன் கூடிவாழ்வோம்
வென்றெடுத்த மண்ணில் இனியென்று சேர்வோம்

தயக்கம் தரும் காற்புள்ளிகள் நம்முள் வேண்டாம்
மயக்கம் கொடுக்கும் அரைப்புள்ளிகளும் வேண்டாம்
வியக்க வைக்கும் குறிகளும் வேண்டாம்
செயற்திறனில் முன்னிற்பதே நமக்குள் வேண்டும்.

குறியீடுகள் வாழ்வில் வந்து குறுக்கிட்டாலும்
வெறிபிடித்த இனவெறியர் வந்து மிதித்தாலும்
நெறிமுறையாய் நாம் என்றும் வாழ்வை ஓட்டி
பறிபோன நம்மண்ணை நிச்சயம் மீட்டெடுப்போம்

நின்று நிமிர்ந்தபோது.....

அன்று பார்த்த முகமல்லவா
என்று மனதில எண்ணியே
நின்று நிமிர்ந்து பார்த்தபோது
இன்று மனம குழப்பம கொண்டு
மெனறு வார்த்தைகளை விழுங்குகின்றேன்
சென்று விட்ட ஆண்டுகளினால்
அன்று என்றாகி விட்ட இந்த நிலை
நன்று அன்று நன்று அன்று நன்றன்று.

நாடுவிட்டு நாடுவந்து வாழ்வினையும் மாற்றிவிட்டு
வீடுநோக்கி சென்று நின்ற பொழுதினிலே
நெருங்கி வந்தான் ஒரு பள்ளித் தோழன் ஒருநாள்
புருவத்தை உயர்த்தி யாரிவனென்று விளித்தேன்
கரும் சிலேட்டில் கணக்கெழுதிப் படித்த காலம்
தெருவெல்லாம் சைக்கிளில் அலைந்த காலம்
இருக்கும் நினைவில் இல்லையோ என்று அவன் கேட்க
அருமை நண்பன் இவனடா என்று உள்ளம் அரற்ற
விருப்புடனே நின்று நிமிர்ந்தபோது
அருவமாய் நின்றவன் உருவமானான்.

புதிய வரவுகள் பழமைகளைச் சாகடிக்கலாமோ?
புத்தி பேதலித்து உறவுகளை மறக்கலாமோ?
புகுந்தகம் வந்ததால் பிறந்தகம் மறைந்திடுமோ?
புலம்பெயர்ந்த காரணத்தால், பிறர்நலம் பேணத் தவறலாமோ?

அந்தக் கணங்கள் தந்த ரணங்கள்

அந்தக் கணங்கள் தந்த ரணங்கள்
எந்த யுகத்திலும் மாறாத வடுக்கள்தான்
சொந்த பந்தங்களின் உயிர் பறித்து
வெந்த புண்ணில் வேல் பாய்ச்சி
நொந்த மனங்களுக்கு ஒளடதந்தான் இங்கேது?

பொட்டிட்ட நெற்றி கண்டால் பட்டென வெட்டிச்சாய்த்து
கட்டிக்காத்த தமிழர் சொத்தை தீயில் கருக்கி
தொட்டில் பிள்ளைகளையும் கொன்று எறிந்த
துட்ட கைமுனுக்கள் தந்த ரணங்கள் என்று மாறும்?

காட்டெருமைகளைக் கட்டவிழ்த்து நாட்டில் விட்டு
வீட்டுக்குள் புகுந்து துவம்சம் செய்யவைத்து
கோட்டையென்று சொல்லும் உன் கொழும்பு நகரில்
காட்டுத்தர்பார் நடத்த அரசே நீ ஏன் மௌனியானாய்?

இனக் கலவரங்கள் இனியும் வேண்டாம்
மனங்களில் இனியும் ரணங்கள் வேண்டாம்
வனங்களாய் நாடுகள் மாறவும் வேண்டாம்
ஊனங்கள் கொண்ட உள்ளங்களும் வேண்டாம்

ஊன்றுகோல்

விழுந்து விட்டோமே என்ற ஆதங்கம் மனதை நிறைக்க
எழுந்து நடக்கப் பின்னின்றால் அது விவேகமல்ல
கொழுந்து விட்டெரியும் ஆசைகள் பலவற்றின்
கொழுகொம்பாய் இன்னொருவர் நின்றுவிட்டால் அதுவிவேகம்

ஊனம் வந்தால்தான் ஊன்றுகோலின் தேவை தெரிகின்றது
மானம் இழந்தால் அவமானம் வந்து சேர்;கின்றது
தானம் கொடுப்பதனால் புண்ணியம் தேடி வருகின்றது
ஞானம் இல்லையென்றால் தெளிவும் தேய்ந்து விடுகின்றது

கால் முடமென்றால், கையின் பிடிப்பு ஊன்றுகோலில்தான்
பால் குடிக்கும் குழந்தைக்கு அதன் வளர்ச்சியில் அதுவும் ஊன்றுகோல்தான்
வால் பிடிக்கும் மனிதனுக்கு அதுவும் அங்கே ஊன்றுகோல்தான்
வேல் பிடித்த வீரனுக்கு போரில் அதுவும் ஒரு ஊன்றுகோல்தான்

ஊன்றுகோல்கள் நம்மிடையே உருவத்தில் மாறிடினும்
உலகெங்கும் இவை மனிதருக்கு தேவைதான் கண்டிடுவீர்
சான்றுகள் பலகோடி உண்டல்லோ அறிந்திடுவீர்
விலகாது என்றுமே இந்த ஊன்றுகோல் நம் வாழ்வினிலே.